to all the Secretaries of the Departments. Summon செய்யுங்கள். 3 நாட்களில் பதில் வரவேண்டுமென்று சொல்லுங்கள். வானளாவிய அதிகாரம் உங்களுக்கு உண்டு. (குறுக்கீடு) ஆனால், ஒன்று, I am very thankful to our Chief Secretary. சபாநாயகர் இருக்கையில் தலைமை மாற்றம் போன்று, இவர்கள் இருக்கையில் 2, 3 Secretary மாறி மாறி தினமும் வந்து உட்காருகிறார்கள். இப்போது வந்திருக்கிறார். அவரிடம் சொல்லும்போது, he can send a summon to all the Departments. அவரிடம் சொன்னால் போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நிறைய கேள்விகளுக்கு, நம்முடைய உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு என்று சொன்னால், அவையினுடைய கவனத்தை ஈர்க்கின்றவகையிலே, கேட்கின்ற கேள்விகளுக்கு உடனடியாக பதிலைப் பெற்றுத் தருவதிலே நான் முனைப்பாக இருக்கிறேன். சில நேரங்களில், நம்முடைய உறுப்பினர்களும் வினாவாகக் கேட்க வேண்டியவற்றை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுக்கிறார்கள். கொடுத்துவிட்டு, நான் கொடுத்தது என்னவாயிற்று என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை வினாவாக மாற்றுவதற்கும் உத்தரவிட்டிருக்கிறேன். அதை வினாவாகக் கொடுத்தால், வினாவாகவாவது எடுத்துக்கொள்ளலாம். அதுவும் செய்வதில்லை. ஆகவே, கவன ஈர்ப்புக்கான பதிலைப் பெற்று, உடனடியாக ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்வதற்கு நான் முயற்சிக்கிறேன் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குக்கூட ஒரு கவன ஈர்ப்பை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், அவசர முக்கியத்துவம் கருதி, கேட்டுக்கொண்டார். அவர் கேட்டுக்கொண்டதால் இப்போது அனுமதிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

(ஈ) தென்னை மரத்தில் 'வெள்ளை ஈ'யின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துதல்

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவின் அரசை மிகச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கின்ற விவசாயிகளின் காவலர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

தமிழகத்திலே நெல் விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெரும்பான்மையாக செய்யப்படுகின்ற தென்னை விவசாயத்திற்கு

ஏற்பட்டிருக்கின்ற ஒரு சிக்கலை அரசின் கவனத்திற்கு இந்த அவையின் மூலமாகத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில், தென்னை சாகுபடி அதிகமாக இருந்து வருகிறது. தமிழகம் முழுவதும் சுமார் 9 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் தென்னை விவசாயம் செய்யப்படுகிறது. இந்தத் தென்னை மரத்தில், கேரள மாநிலத்திலிருந்து வந்த ‘வெள்ளை ஈ’ படிப்படியாக பரவி, தென்னை மரத்தின் ஓலையின் பின்பகுதியிலே இருக்கின்ற பச்சையத்தை முழுவதுமாக சாப்பிட்டு விட்டதால், தென்னை மரம் மூன்றில் ஒரு பங்கு காய்ப்புத் திறனை இழந்துவிட்டது. பொள்ளாச்சியிலிருந்து பரவி உடுமலை, பழனி, திண்டுக்கல், தேனி, பெரியகுளம் என்று ஒவ்வொரு ஊராகப் பரவி, இப்போது தமிழகமெங்கும் ஏகமாக இந்த வெள்ளை ஈயின் தாக்கம் ஏற்பட்டிருக்கிறது. விரைவில், சேலம், எடப்பாடி வரை தமிழகம் முழுவதும் பரவுவதற்கான வாய்ப்பும் உள்ளது. தென்னையை மட்டும் தாக்கி வந்த வெள்ளை ஈ, இப்போது பப்பாளி, மாதுளை, கொய்யா, தக்காளி, வெண்டை, கத்திரி போன்ற அனைத்து காய்கறிப் பயிர்களையும், பழப் பயிர்களையும் தாக்கத் தொடங்கியிருக்கிறது. எனவே, தென்னை விவசாயம் மட்டுமல்லாமல், மற்ற விவசாயப் பயிர்களையும் தாக்கியிருக்கின்ற இந்த வெள்ளை ஈயை உடனடியாக ஒழிப்பதற்கு, எப்படி கொரோனா வைரஸை ஒழிப்பதற்கு நம்முடைய அம்மா அவர்களின் அரசு தீவிர கவனம் செலுத்துகிறதோ அதேபோல இந்த வெள்ளை ஈயின் தாக்கம் ஓராண்டுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது 2 மடங்கு, 4 மடங்கு என்று உயர்ந்துவிட்டதால், அதைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நண்பகல் 12–00

இந்த வெள்ளை ஈயின் தாக்கத்தை முழுமையாக அழிப்பதற்கு, எப்படி மக்காச்சோளத்திலே அமெரிக்கன் படைப்புழு தாக்கியபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், விவசாயிகளின் காவலர் 48 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, ஒரே சமயத்தில் தமிழகம் முழுவதும் இருக்கின்ற மக்காச்சோளப் பயிர்களுக்கு மருந்துகள் அடிக்கப்பட்டு, அந்த மக்காச்சோளப் பயிர்கள் மிக நல்ல மகசூலை எந்த ஆண்டும் இல்லாத வகையில், இந்த ஆண்டு முழுமையாக, மிகச் சிறப்பான மகசூலை எட்டியுள்ளதோ, அதைப்போல, ஒரே சமயத்தில் சமச்சீராக அனைத்து பகுதிகளிலும் தென்னையில் பரவியிருக்கின்ற அந்த வெள்ளை ஈயை மேற்கொண்டு பரவாமலும், வெள்ளை ஈயை ஒழிக்கத்தக்க வகையிலும், அம்மாவின் அரசு சிறப்பான கவனம்

செலுத்தி, போதுமான நிதியை ஒதுக்கி, வெள்ளை ஈயை முற்றிலுமாக ஒழித்து, தென்னை விவசாயத்தினை, பணப் பயிர் விவசாயத்தினை, காய்கறி விவசாயத்தினைக் காப்பாற்ற வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குத் தேவையான ஆக்கமும், ஊக்கமும் தர வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கோயம்புத்தூர், திருப்பூர், கன்னியாகுமரி, ஈரோடு, சேலம், நாமக்கல் மற்றும் கடலூர் உள்ளிட்ட 19 மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தென்னை மரங்களில், Rugose Spiraling Whitefly—சுருள் வெள்ளை ஈ பூச்சியின் தாக்குதல் காணப்படுகின்றது. தமிழ்நாட்டில், மொத்தமுள்ள 4 இலட்சத்து 39 ஆயிரத்து 746 ஹெக்டேர் தென்னை சாகுபடி பரப்பில், 25,000 ஹெக்டேரில் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் அதிகமாகக் காணப்படுகிறது. குறிப்பாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு, ஆனைமலை ஆகிய வட்டாரங்களில் இப்பூச்சியின் தாக்குதல் அதிகமாகக் காணப்படுகின்றது. தற்போது, அதிகரித்துவரும் வெப்பத்தின் காரணமாக சுருள் வெள்ளை ஈயின் தாக்குதல் திடீரெனப் பெருகியுள்ளது. தென்னை மட்டுமல்லாது, அருகிலுள்ள பாக்கு மற்றும் காய்கறி பயிர்களிலும் இந்த ஈயின் தாக்குதல் காணப்படுகின்றது. இந்த ஈயின் தாக்குதல் பற்றிய விவரம் தெரிந்தவுடனேயே, எப்படி போர்க்கால அடிப்படையில் அமெரிக்கன் படைப் புழுவை அழித்து, இரு மடங்கு உற்பத்தி, மும்மடங்கு இலாபம் என்கிற அடிப்படையில் இன்றைக்கு மக்காச்சோள உற்பத்தியில் விவசாயிகள் அதிக இலாபத்தைக் கண்டிருக்கின்றார்களோ, அந்த அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு, பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி, திருச்சியில் இயங்கிவரும் மத்திய ஒருங்கிணைந்த பூச்சி மையம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உதவியுடன் தாக்குதல் காணப்பட்ட பகுதிகள் மட்டுமல்லாது, மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள்

2020 மார்ச் 17] [திரு. இரா. துரைக்கண்ணு]

குறித்து, 281 விழிப்புணர்வு முகாம்கள் விவசாயிகளுக்கும், களப் பணியாளர்களுக்கும் நடத்தப்பட்டன. இதற்கு எந்தவித மருந்துகளும் இல்லாமல் வெறும் தண்ணீரை இலைகளின் அடிப்பகுதிகளில் படுமாறு வேகமாகத் தெளித்தாலே தென்னையைத் தாக்கும் வெள்ளை ஈக்கள், முட்டைகள் மற்றும் இளம் குஞ்சுகள் அனைத்தும் தண்ணீரில் அடித்துச் செல்லப்படும். இம்முறையினால் பெருமளவு வெள்ளை ஈக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இப்பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்த, ஒரு ஹெக்டேருக்கு 20 மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளை தென்னந்தோப்புகளில் வைக்க விவசாயிகளுக்கு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. சுருள் வெள்ளை ஈயின் இயற்கை எதிரியான Encarsia முட்டை ஒட்டுண்ணிகள் ஒரு ஹெக்டேருக்கு 250 வீதம், இதுவரை 2 இலட்சத்து 9 ஆயிரத்து 800 Encarsia முட்டை ஒட்டுண்ணிகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின்மூலம் விவசாயிகளுக்கு முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. சுருள் வெள்ளை ஈயின் மற்றொரு இயற்கை எதிரியான கண்ணாடி இறக்கை பூச்சிகளின் முட்டைகளை உற்பத்தி செய்து, ஒரு ஹெக்டேருக்கு 1,000 முட்டைகள் வீதம், இதுவரை 3 இலட்சத்து 19 ஆயிரம் கண்ணாடி இறக்கை பூச்சிகளின் முட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தென்னையை பாதிக்கும் சுருள் வெள்ளை ஈக்களை வயலில் இயற்கையாகவே உள்ள நன்மை செய்யும் பூச்சிகள்மூலம் கட்டுப்படுத்த முடியும் என்பதால், இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை விவசாயிகள் கண்டிப்பாக பயன்படுத்த வேண்டாமென வானொலி, பத்திரிகைகள் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சிகள் மூலமாகவும் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வுகள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் சுருள் வெள்ளை ஈயினால் பாதிக்கப்பட்ட தென்னை, பாக்கு மற்றும் காய்கறிகளை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அனைவரும் பரிந்துரைக்கப்பட்ட பயிர் பாதுகாப்பு நடவடிக்கையைப் பின்பற்ற வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப்பெற்று, சுருள் வெள்ளை ஈயின் தாக்குதலை கட்டுப்படுத்திட, 5 கோடியே 97 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, பாதிக்கப்பட்ட தென்னை மற்றும் பாக்கு மரங்களின் இலைகளின் அடிப்பகுதிகளில் வேகமாகப் படுமாறு தண்ணீரைத் தெளிப்பதற்கு நிதியுதவியாக

ஹெக்டேருக்கு ரூ.1,000/– பின்னேற்பு மானியமாகவும், மஞ்சள் நிற ஒட்டும் பொறி, கண்ணாடி இறக்கை பூச்சிகளின் முட்டைகள் ஆகியவற்றை வழங்கிட ரூ.1,100/–ம், ஆக மொத்தம் ஹெக்டேருக்கு ரூ.2,100/– வீதமும், பாதிக்கப்பட்டுள்ள காய்கறிப் பயிர்களுக்கு, மஞ்சள் நிற ஒட்டும் பொறி, கண்ணாடி இறக்கை பூச்சிகளின் முட்டைகள் ஆகியவற்றை வழங்கிட ஹெக்டேருக்கு ரூ.1,900/–மும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 12–05

எனவே, மக்காச்சோளத்தில் படைப்புழு எப்படிக் கட்டுப்படுத்தப்பட்டதோ அதேபோன்று தென்னை, பாக்கு மற்றும் காய்கறிப் பயிர்களில் சுருள் வெள்ளை ஈயின் தாக்குதலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

(இ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(அ) கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020–2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை). மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,